---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஸ்ரீ லங்கா போர்ட் மெனேஜ்மென்ட் அன்ட் கன்சல்டன்ஸி சேர்விசஸ் (பிறைவேட்) கம்பனியின் ("கம்பனி") 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, கம்பனியின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பனவற்றை உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான (SMEs) இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (SLFRS) இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான (SMEs) இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு (SLFRS) இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு

காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனியின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ‘‘சிறப்பாகக் திட்டமிட்டு பேணுதல்’’ நிறுவனங்களிற்கு அவசியமாக உள்ளது.

**1.5.2 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான (SMEs) இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களுடன் (SLFRS) இணங்காமை**

| உரிய நியமத்துடனான தொடர்புடன் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முயற்சிகளுக்கான (SMEs) இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் (SLFRS) 17.19 ஆம் பிரிவிற்கமைய சொத்துக்களின் எஞ்சிய பெறுமதி அல்லது பயன்படு ஆயுட்காலம் ஆகக் குறைந்தது ஒவ்வொரு மீதியாண்டின் இறுதியிலும் மீளாய்வு செய்யப்பட வேண்டியதுடன் எதிர்பார்த்த ஆயுட்காலம் முன்னைய மதிப்பீட்டினை விட வேறுபடின் பயன்படு ஆயுட்காலத்தினை மீள மதிப்பிட வேண்டும். அதன் போது பெறுமான தேய்வு முறைமை மற்றும் பயன்படு ஆயுட்காலம் அதற்கமைய மாற்றம் அடைய வேண்டிய போதிலும் கணக்கு வைக்கப்பட்டுள்ள முழுமையாக தேய்விடப்பட்ட ரூபாய்.1,613,975 பெறுமதியான சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்யாது தொடர்ந்து பயன்படுத்தப்பட்டவாறு காணப்பட்டது. | இங்கு பெரும்பாலான தளபாடங்கள் மற்றும் கணினிகள் 2011 ஆம் ஆண்டு அல்லது அதற்கு முன்னைய வருடங்களிலேயே கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. சில சொத்துக்கள் மிகவும் சிதைவடைந்த நிலையில் காணப்படுகின்றமை பௌதிக பரிசோதனைகளில் எம்மால் காணக்கூடியதாக இருந்தது.<br><br>2025 இல் நிறுவனத்தின் நிலையான சொத்துக்களை மீளாய்வு செய்ய நடவடிக்கை எடுப்பதுடன் அதன் போது தொடர்ந்தும் பயன்படுத்தக்கூடிய சொத்துக்கள் இனங்காணப்பட்டு அவற்றின் பயன்படு ஆயட்காலத்தினை தீர்மானிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முயற்சிகளுக்கான (SMEs) இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் (SLFRS) இன் பிரகாரம் ஒவ்வொரு மீதியாண்டின் இறுதியிலும் கம்பனியின் நிலையான சொத்துக்கள் மீளாய்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முயற்சிகளுக்கான (SMEs) இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் (SLFRS) 21.15 ஆம் பிரிவிற்கமைய பொறுப்புகளை தீர்க்கும் போது நிறுவனத்தின் வளங்கள் வெளிப்பாய்ச்சப்படும் இயலுமை உள்ள பொறுப்புக்கள் தொடர்பில் நிறுவனத்தினால் மீதிக்கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட வேண்டியதுடன் 21.12 பிரிவுக்கமைய கம்பனி மற்றும் தனியார் கம்பனி ஒன்று ஆகியவற்றுக்கு இடையே ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட | குறித்த வழக்கு தொடர்பில் இறுதித் தீர்மானம் இதுவரையிலும் கிடைத்திராததுடன் மாவட்ட மீதிமன்றத்தில் கிடைக்கப்பெற்ற தீர்ப்பினை இறுதி தீர்ப்பாக கம்பனியின் பணிப்பாளர் சபையினால் ஏற்றுக் கொள்ளாமையால் அது மேன்முறையீடு செய்யப்பட்டு உயர் மீதிமன்றத்தில் தற்போது விசாரிக்கப்பட்டவாறு உள்ளது. இதுவரையிலும் தீர்ப்பு ஒன்று வழங்கப்பட்டிராததுடன் | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முயற்சிகளுக்கான (SMEs) இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் (SLFRS) 21.15 பிரிவின் பிரகாரம் வெளிப்படுத்தல்கள் மற்றும் 21.12 பிரிவிற்கமைய செயற்பட வேண்டியமை. |

| | | |
|---|---|---|
| உடன்படிக்கையொன்றின் அடிப்படையில் உருவாகிய சிக்கல் ஒன்றினால் தொடுக்கப்பட்ட வழக்கின் பிரகாரம் கம்ெனிக்கு ரூபாய்.28,902,456 தொகையான நிகழத்தக்க பொறுப்பிற்கு உள்ளாவதற்கு நேர்ந்துள்ள போதிலும் மீதிக்கூற்றுகளில் அது தொடர்பில் எந்த வெளிப்படுத்தலும் அல்லது ஒதுக்கமும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கொடுப்பனவு அல்லது செலுத்த வேண்டிய பெறுமதியினை திட்டவட்டமாக இனங்காண முடியாதுள்ளது. உயர் மீதிமன்றத்தின் தீர்ப்பு எதிர்வரும் ஆண்டினுள் கிடைக்கவில்லை எனின் இவ்விடயம் தொடர்பில் நிகழத்தக்க பொறுப்பின் கீழ் எதிர்வரும் வருடத்தில் கணக்குகளில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |

### 1.5.3 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியினால் ரூபாய்.267,905,445 பெறுமதியுடனான 364 பேரேட்டு பதிவுகள் இடப்பட்டுள்ளதுடன் பேரேட்டு பதிவுகளை இடுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட முறையான கொள்கை ஒன்று இல்லை என்பதும் அனைத்து பேரேட்டு பதிவுகளுக்காகவும் குறியீடு காணப்படவில்லை என்பதும் ரூபாய்.4,594,858 பெறுமதியான 13 பேரேட்டு பதிவுகளுக்காக துணை ஆவணங்கள் (Supporting Documents) இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | கம்பனியினால் பேரேட்டு பதிவுகள் இடப்பட்டுள்ள 13 சந்தர்ப்பங்கள் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் நிறுவனத்தின் கணக்காளரால் பரீட்சிக்கப்பட்டு அந்த அனைத்து பேரேட்டு பதிவுகளும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பேரேட்டு பதிவுகளை இடுதல் மற்றும் கணக்கு வைக்கும் நடைமுறையொன்று உருவாக்கப்பட்டு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | பேரேட்டு பதிவுகளை பயன்படுத்துவதற்கு முறையான கொள்கை ஒன்று தயாரிக்கப்பட வேண்டியதுடன் குறித்த செலவினங்களை சரியாக பதிவேட்டில் உள்ளடக்குவதற்கு கம்பனி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.4 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 03 சந்தர்ப்பங்களுக்கு உரிய தனியார் மற்றும் அரச நிறுவனம் ஒன்றில் வைப்பு மற்றும் பெற்றுக் கொள்ளப்பட வேண்டியவற்றின் கூட்டுத்தொகை ரூபாய்.928,971 தொகையானது 2021 நவம்பர் 16 ஆம் திகதிய மீதி அமைச்சின் 01/2021 ஆம் இலக்க பொது | ரூபாய்.23,626 மற்றும் ரூபாய்.25,000 ஆன பெறவேண்டிய மீதி ஒன்று உறுதிப்படுத்துவதற்கு உரிய எந்த தகவலும் கம்பனியிடம் காணப்படாமை மற்றும் தனியார் நிறுவனங்கள் இரண்டிலிருந்து அறவிடப்பட | குறித்த சுற்றறிக்கையின் அறிவுரைகளுக்கு அமைய முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது. |

| | | | |
|---|---|---|---|
| | முயற்சிகள் சுற்றறிக்கையின் செயல்வழி கையேட்டின் 6.9 ஆம் அத்தியாயத்திற்கமைய முறையான அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ளாது பதிவழிப்பதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருந்தது. | வேண்டிய மீதி நீண்ட காலம் அறவிடப்படாது காணப்பட்டமை மற்றும் அறவிடுவதற்கு நிலவும் சிக்கல்கள் காரணமாக 100% ஐயக்கடன் ஒதுக்கத்தினை மேற்கொள்ள கணக்காளர் தலைவரின் அங்கீகாரத்தினை கோரி இருந்ததுடன் தலைவரின் அங்கீகாரம் கிடைத்துள்ளது.<br>எவ்வாறான போதிலும் எதிர்காலத்தில் இவ்வாறான ஒதுக்கமென்று பணிப்பாளர் சபை அங்கீகாரத்துடன் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | 1983 இன் 12 ஆம் இலக்க மிகை ஊதிய கொடுப்பனவு அதிகாரச் சட்டத்திற்கமைய சேவை வழங்குனரால் 05 வருடங்களுக்கு குறையாத சேவைக்காலத்தை பூர்த்தி செய்துள்ள ஒவ்வொரு ஊழியருக்கும் அச்சேவை தொடர்பில் செலுத்த வேண்டிய பணிக்கொடை கணிப்பிடப்பட்டு அவருக்கும், அவரது உரித்தாளர்களுக்கும் சேவை நிறைவடையும் திகதியிலிருந்து 30 நாட்களினுள் கம்பனியினால் செலுத்தப்பட வேண்டிய போதிலும் 2021 ஆம் ஆண்டில் சேவையிலிருந்து விலகிச் சென்றிருந்த 08 ஊழியர்களுக்கு ரூபாய்.1,281,960 ஆன தொகை 2022 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. 1992 இன் 62 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு (திருத்திய) அதிகாரச் சட்டத்திற்கமைய பணிக்கொடை செலுத்துவதற்கு உரிய திகதியிலிருந்து 12 மாதங்களுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக காணப்பட்ட சந்தர்ப்பம் ஒன்றில் பணிக்கொடையாக செலுத்த வேண்டிய தொகையில் 30 சதவீத மிகை கட்டணம் ஒன்று செலுத்தப்பட வேண்டிய போதிலும் நிலுவை | இந்த பணிக்கொடை தொகையானது உரிய சந்தர்ப்பத்தில் செலுத்துவதற்கு கொடுப்பனவு பிரிவிற்கு சமர்ப்பிக்கப்படாமை தொடர்பில் பணிப்பாளர் சபையினால் மதியுரையாளர் / பணிப்பாளர் (மனித வளம் மற்றும் நிர்வாகம்) இடமிருந்து அறிக்கை ஒன்று கோரப்பட்டுள்ளது. காலம் விஞ்சி சென்றுள்ள கொடுப்பனவுகளை இது குறிப்பிடுகின்றமை தொடர்பில் உரிய உத்தியோகத்தர்கள் தொடர்பிலும் தற்போது உள்ளக விசாரணை ஒன்று இடம்பெறுகின்றது. விசாரணை அறிக்கையின் பரிந்துரைகளுக்கு அமைய குறித்த மிகைக் கட்டணத்தை செலுத்துதல் கம்பனியின் செலவினம் ஆகின்றதா? அல்லாவிடின் குற்றம் இழைத்தவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டுமா என்பது தொடர்பிலான தீர்மானமானது பணிப்பாளர் சபையிடம் காணப்படுவதுடன் அதுவரையிலும் இதனை திட்டவட்டமாக நிறுவனத்தின் செலவினம் ஒன்றாக இனங்கான இயலுமை இல்லை என்பதால் ஒதுக்கம் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பணிக்கொடை பணிகள் அதிகாரச் சட்டத்தின் அறிவுரைக்கமைய கம்பனி செயல்பட வேண்டும் என்பது. |

பணிக்கொடைக்காக கம்பனியினால் செலுத்த வேண்டியதாக காணப்பட்ட ரூபாய்.384,588 ஆன மிகை கட்டணத்திற்கு உரிய ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 1.5.5 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் மற்றும் அறிக்கைகள்

| நிதிக்கூற்றின் பிரகாரம் பெறுமதி | தொடர்படைய அறிக்கைகளின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| நிதிக்கூற்றுக்களுக்கு அமைய 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக கம்பனியினால் வழங்கப்பட்ட சேவைகளுக்காக இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையில் இருந்து கம்பனிக்கு பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய மீதி மற்றும் சேவை தரகு ஆகியவையாக (Revenue Sharing) துறைமுகங்கள் அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய மீதி முறையே ரூபாய்.85,374,146 மற்றும் ரூபாய்.940,230 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | அத்திகதியில் உள்ளபடியாக இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையினால் கம்பனிக்கு செலுத்த வேண்டிய தொகை மற்றும் கம்பனியிலிருந்து அறவிடப்பட வேண்டிய தொகை முறையே ரூபாய்.78,114,516 மற்றும் ரூபாய்.7,609,035 ஆக குறிப்பிடப்பட்டிருந்தது. | இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையில் இருந்து கம்பனிக்கு அறவிடப்பட வேண்டிய மீதியில் ரூபாய்.7,259,630 மற்றும் கம்பனியினால் துறைமுகங்கள் அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய மீதியில் ரூபாய்.6,668,805 ஆன வேறுபாடு ஒன்று நிலவியது. | இலங்கை துறைமுகங்கள் அதிகார சபைக்கு 2022 ஆம் ஆண்டினுள் வழங்கிய சேவைகளுக்கான பற்றுச் சீட்டுகளை வழங்குவதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்துள்ளதுடன் உரிய காலப்பகுதியினுள் வருமானம் SLFRS for SMEs இன் பிரகாரம் உரிய முறையில் இனங்காணப்பட்டு அவை கணக்கு வைக்கப்பட்டுள்ளன.<br><br>2022 ஆம் ஆண்டிற்குரிய அச்சேவைகளுக்கான மீதிகள் மற்றும் பற்றுச் சீட்டு இலக்கத்துடனான அறிக்கை ஒன்று எம்மால் துறைமுகங்கள் அதிகார சபையின் தலைமை மீதி உத்தியோகத்திற்கு அனுப்பப்பட்டுள்ள போதிலும் | துறைமுகங்கள் அதிகார சபையுடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டு மீதிகள் இணக்கம் செய்யப்பட்டு சரியான மீதிகளை பெற்றுக்கொள்ள முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது. |

| | | |
|---|---|---|
| | | துறைமுகங்கள் அதிகார சபையின் கணக்கு தகவல்கள் கம்பனிக்கு கிடைக்கவில்லை. |

**1.5.6 கணக்காய்வுக்கான சான்றுகளின்மை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீதி உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்படாத காரணத்தால் 4 கடன் பட்டோரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபாய்.5,773,758 தொகையான கடன் கொடுத்தோர் 11 பேருக்கு செலுத்த வேண்டிய ரூபாய்.45,847,659 தொகை தொடர்பிலான நிலவுகை மற்றும் சரியான தன்மை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | மீதிகளை உறுதிப்படுத்துமாறு குறிப்பிட்டு உரிய தரப்பினருக்கு கம்பனியினால் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. 2022 ஆம் ஆண்டுக்காக அவர்களுக்கு வழங்கிய சேவைகளுக்கு உரியதாக அந்த நிறுவனங்களினால் எமது கம்பனிக்கு வழங்கப்பட்டுள்ள பற்றுச் சீட்டுகளின் மீதிகளை அடிப்படையாகக் கொண்டு செலுத்த வேண்டிய மீதிகள் கணக்கு வைக்கப்பட்டுள்ளன. அம் மீதிகளுக்குரிய கொடுப்பனவு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றமையால் அந்த மீதிகளை உறுதிப்படுத்தி பரிசோதனைக்கு முன்வைக்க முடியும். | குறித்த மீதி உறுதிப்படுத்தல்களை பெற்றுக் கொள்ள கம்பனி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய பணம்**

**1.6.1 பெற வேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை துறைமுகங்கள் அதிகார சபைக்கு சொந்தமான மக்கலம் லொக் வாயில் வளாகம் 2018 பெப்ரவரி 01 திகதி முதல் 5 வருட காலப்பகுதிக்கு தனியார் தரப்பினருக்கு கம்பனியினால் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. ஆரம்பத்தில் மீள செலுத்தப்படும் வைப்பு | அழிவு நட்டம் ஒன்றினை சீராக்குவதற்கு SLFRS 27.5 ஆம் பிரிவிற்கமைய இந்த பெற வேண்டிய வருமானத்தினை அறவிடக்கூடிய அளவு மற்றும் அறவிட முடியாத அளவு ஆகியவை இனங்காணப்பட வேண்டும். அதனால் இத்தொகை அறவிடுதல் தொடர்பில் வெற்றிகரமான | தனியார் தரப்பினரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய இந்த மீதி பெறவேண்டிய மீதியாக மூன்று வருட காலம் எனும் நீண்ட காலமாக நிதிக் கூற்றுக்களில் காணப்படுகிறது. இதற்கான சட்ட |

| | | | |
|---|---|---|---|
| | பணமாக ஆறு மாத குத்தகை வாடகையான ரூபாய்.3,150,000 வைப்பு செய்யப்பட வேண்டிய போதிலும் குத்தகையாளரால் ரூபாய்.1,811,250 மாத்திரம் வைப்பு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபாய்.5,279,264 ஆன குத்தகை வாடகை ஒன்று உள்ள போது 2020 ஆம் ஆண்டில் உடன்படிக்கை முடிறுத்தப்பட்டிருந்தது. மேற்படி வைப்புத் தொகையினை கழித்த பின்னர் மீளாய்வாண்டின் மீதிக்கூற்றுகளில் தனியார் தரப்பினவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மீதியாக ரூபாய்.3,468,014 குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முயற்சிகளுக்கான ஒரு (SMEs) இலங்கை மீதி அறிக்கையிடல் நியமம் (SLFRS) 27.5 ஆம் பந்திக்கமைய அழிவு நட்டச் சீராக்கும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்படுகின்றமையால் பணத்தை அறவிட முடியாது உள்ளமை அல்லது அறவிட முடியாத தொகை தொடர்பில் தெளிவாக இனங்கான முடியாது உள்ளது. 2022 ஆம் ஆண்டில் ஒட்டுமொத்த நிலுவைத் தொகையையும் அறவிடுதல் தொடர்பிலேயே கலந்துரையாடல் இடம் பெற்றமையால் 2022 ஆம் ஆண்டிற்கான அழிவு நட்டம் சீராக்கப்படவில்லை. எனினும் 2022 ஆம் ஆண்டில் இடம்பெற்ற கலந்துரையாடல்களின் பெறுபேறொன்றாக அல்லது செயன் முன்னேற்றம் ஒன்று 2023 கணக்காண்டினுள் காண்பிக்கப்படாவிடின் 2023 ஆம் ஆண்டின் கணக்குகளில் அழிவு நட்டம் சீராக்கம் மேற்கொள்ளப்படும். | ஆலோசனைகளையும் கம்பனி கோரி உள்ளமையால் SLFRS 27.5 பிரிவிற்கமைய அழிவுநட்ட சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது. |
| (ஆ) | கம்பனியினால் உணவு விற்பனை நிலையங்கள் மூன்றினை நிறுவுவதற்கு காலி முகத்திடலில் 20 x 10 அடி அளவிலான காணித் துண்டு ஒன்று ரூபாய்.900,000 ஆன மீள செலுத்தப்படும் வைப்பினை வைத்த தனியார் கம்பனிக்கு 2017 மார்ச் 27 ஆம் திகதி குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் வாடகை செலுத்துதல் 2019 மே மாதம் முதல் புறக்கணிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய 2022 டிசம்பர் 31 ஆம் திகதி உள்ளபடியான ரூபாய்.1,635,000 ஆன | இந்த பணத்தை அறவிடுதல் தொடர்பில் உரிய தரப்பினருடன் கலந்துரையாடல் இடம் பெறுவதுடன் அவற்றை 2022 ஆம் ஆண்டில் வெற்றிகரமாக மேற்கொண்டமையால் அறிக்கையிடப்பட்ட திகதி அளவில் அழிவு நட்டமொன்றினை அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே காலி முகத்திடலில் புதிய கடைகளை வழங்குவதற்கு விலை கேள்வி கூறும் போது தனியார் நிறுவனமொன்று 02 | தனியார் தரப்பினரிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய இந்த மீதியானது மூன்று வருடங்கள் எனும் மிக நீண்ட காலமாக பெறவேண்டிய மீதியாக நிதிக்கூற்றுகளில் காண்பிக்கப்படுகின்றது. இதற்காக சட்ட ஆலோசனையையும் கம்பனி கோரியுள்ளமையால் SLFRS 27.5 பிரிவிற்கமைய |

| | | | |
|---|---|---|---|
| | தொகை ஏனைய பெறவேண்டிய மீதியாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் கம்பனி சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முயற்சிகளுக்கான (SMEs) இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் (SLFRS) 27.5 ஆம் பிரிவிற்கமைய அழிவுநட்ட சீராக்கம் இடம்பெற்றிருக்கவில்லை. | கடைகளை கோரியுள்ளதுடன் அந்த கடைகளை வழங்குவதற்கு எனின் கம்பனிக்கு அறவிட வேண்டிய நிலுவை பணத்தை அறவிட்டு அந்த சந்தர்ப்பத்தில் வழங்குவதற்கு பெறுகைகள் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு பரிந்துரைத்துள்ளது. அதற்கமைய 2022 ஆம் ஆண்டில் கணக்குகளினுள் அழிவு நட்டமொன்று அறிக்கையிடப்படாத போதிலும் மேற்படி நிபந்தனைகள் மற்றும் பரிந்துரைகளுக்கு அமைய உரிய நிலுவைத் தொகை 2023 ஆம் ஆண்டினுள் அறவிடப்படாது விடின் 2023 ஆம் ஆண்டின் கணக்குகளில் அழிவுநட்ட சீராக்கம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | அழிவுநட்ட சீராக்கம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது. |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 133 ஆம் பிரிவு | வருடாந்த பொதுச்சபை கூட்டத்தில் பரீட்சை மீதி திகதியின் பின்னரான 06 மாதங்களுக்கு மேற்படாத காலத்தினுள் கடந்த வருடத்தின் பொதுச்சபை வருடத்தின் பொதுச்சபை கூட்டத்தில் 15 மாதங்களுக்கு மேற்படாத காலத்தினுள் நடாத்தப்பட வேண்டிய போதிலும் கம்பனியினால் 2019 ஆம் ஆண்டின் பின்னர் வருடாந்த பொதுச்சபை கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளினுள் நாட்டில் நிலவிய கொவிட் தொற்றுநோய் நிலைமை மற்றும் ஸ்திரமற்ற நிலையுடன் பணிப்பாளர் சபை கூட்டங்களும் மட்டுப்படுத்தப்பட்டதுடன் 2023 ஆம் ஆண்டில் வருடாந்த பொதுச்சபை கூட்டம் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கம்பனிகள் அதிகார சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய கம்பனி நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (ஆ) 2020 ஜனவரி 27 ஆம் திகதிய பீஈடி 01/2020 ஆம் இலக்க | தலைவருக்கு பெற்றுக் கொள்ளக்கூடிய ஆகக் கூடிய மாதாந்த படியான ரூபாய்.100,000 | PED 01/2020 இற்கு இணங்க எதிர்காலத்தில் நடவடிக்கை | குறித்த சுற்றறிக்கைக்கமைய படிகளை வழங்குவதற்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | சுற்றறிக்கையின் 1.1 ஆம் பந்தி | குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் அதற்கு இணங்காத வகையில் கம்பனியினால் தலைவருக்கு மாதாந்தம் ரூபாய்.105,000 படியாக உரிய ஆண்டினுள் ரூபாய்.60,000 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | எடுக்கப்படும். | கம்பனி நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2016 அக்டோபர் 27 ஆம் திகதிய பிஇடி 01/2015(i) ஆம் இலக்க சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | கம்பனியினால் மீளாய்வாண்டினுள் தலைவருக்கு போக்குவரத்து படிகளாக ரூபாய்.480,000 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | தலைவரின் போக்குவரத்து படிகள் பணிப்பாளர் சபையின் தீர்மானத்திற்கமைய செலுத்தப்பட்டுள்ளன PED 1/2015 (i) இன் பிரகாரம் போக்குவரத்து படியினை சீராக்குதல் தொடர்பில் எதிர்காலத்தில் பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் போக்குவரத்து படிகளை செலுத்துவதற்கு கம்பனி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது. |
| (ஈ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதி நிதி அமைச்சின் பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் 01/2021 கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் செயற்பாட்டு கையேடு | | | |
| | 5.1 ஆம் அத்தியாயம் | உரிய முறையில் குத்தகை / பங்குலாபம் பகிர்ந்து அளிக்கப்பட்டதன் பின்னர் அரசாங்கத்திற்கு சொந்தமான முயற்சிகளின் ஊழியர்களுக்கு இலாபத்தினை அடிப்படையாகக் கொண்டு ஊக்குவிப்பு படிகள் செலுத்தப்பட வேண்டிய போதிலும் 2021 ஆம் ஆண்டின் இலாபத்தினை அடிப்படையாகக் | கம்பனியினால் அதன் நிரந்தர பதவியணிக்கு ஊக்குவிப்பு படிகளை வழங்குதல் 1995 ஆம் ஆண்டு முதல் இடம் பெறுவதுடன் கம்பனியின் நீண்ட கால கொள்கை ஆனது குத்தகை அல்லது பங்குலாபத்திற்கு முன்னர் இலாபத்திலிருந்து ஊக்குவிப்பு படிகளை செலுத்துவதாகும். அவ்வாறே | சுற்றறிக்கைக்கமைய கம்பனி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கொண்டு பங்குலாபத்தினை பகிர்ந்தளிக்காது ஊக்குவிப்பு படிகள் செலுத்தப்பட்டிருந்தன. | ஊக்குவிப்புப்படி வழங்குதல் தொடர்பில் PED 03/2021 சுற்றறிக்கையில் 02 ஆம் இலக்கத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது அரச கூட்டுதாபனங்கள் மற்றும் முழுமையான அரச கம்பனிகளின் செயற்பாட்டு கைநூலின் 5.1 ஆம் அத்தியாயத்திற்கமைய செயல்பட வேண்டும் என்பதாகும். நிறுவனமானது முழுமையான அரச கம்பனி ஒன்று அல்ல என்பதால் குறித்த சுற்றறிக்கைக்கமைய செயற்பட்டிராததுடன் கடந்த வருடங்களைப் போன்று உரிய காலப்பகுதியினுள் பதவியணிக்கு ஊக்குவிப்பு படிகளை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு பெறுபேறுகள் ரூபா 7,125,632 ஆன இலபமாக காணப்பட்டதுட்ன, அதனோடு ஒத்த கடந்த வருடத்தின் இலாபம் ரூபா 1,498,766 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 5,626,866 ஆன அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு காலி முகத்திடலிருந்து கிடைத்த வருமானம் ரூபா 6,280,757 இனால் அதாவது 78 சதவீதத்தினாலும், ஊழியர்களை கூலிக்கு வழங்கும் சேவையிலிருந்து கிடைத்த வருமானம் ரூபா 15,909,435 இனால் அல்லது 88 சதவீதத்தினால், ஏனைய வருமானங்களிலிருந்து கிடைத்த ரூபா 1,346,646 இனால் அல்லது 176 சததவீதத்தினால் மற்றும் நிலையான வைப்புகள்/ரெபோ (Repo) வருமானம் ரூபா 9,022,278 இனால் அல்லது 128 சதவீதத்தினால் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் பிரதான வருமான மற்றும் செலவின உருப்படிகளின் பகுப்பாய்வு பின்வருமாறு ஆகும்.

| உருப்படி | 2022 | 2021 | அதிகரிப்பு/(குறைவு) | சதவீதம் (அதிகரிப்பு/ குறைவு) |
|---|---|---|---|---|
| **வருமானம்** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | |
| சேவைக் கட்டணங்களிலிருந்து கிடைத்த வருமானம் | 13,363,159 | 21,650,334 | (8,287,175) | (38) |
| காலி முகத்திடலில் கிடைத்த வருமானம் | 14,311,331 | 8,030,574 | 6,280,757 | 78 |
| தொழிளாலர்களை கூலிக்கு வழங்கும் சேவையிலிருந்து கிடைத்த வருமானம் | 33,986,704 | 18,077,269 | 15,909,435 | 88 |
| ஏனைய வருமானங்கள் | 2,113,965 | 767,319 | 1,346,646 | 176 |
| நிலையான வைப்புகள்/ரெபோ (Repo) வருமானம் | 16,158,583 | 7,136,305 | 9,022,278 | 126 |
| **நிறுவன மற்றும் நிர்வாகச் செலவினம்** | | | | |
| ஊக்குவிப்பு கொடுப்பனவு | 1,702,940 | 520,464 | 1,182,476 | 227 |
| பணிக்கொடைச் செலவினம் | 1,702,516 | 1,186,020 | 516,496 | 44 |
| சட்ட மற்றும் தொழிற் கட்டணங்கள் | 2,851,679 | 2,040,667 | 811,012 | 40 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நாட்டில் நிலவிய மோசமான காலநிலை காரணமாக துறைமுகத்தின் செயற்பாடுகள் (Lashing and Unlashing, Loading and Unloading) சீர்குலைந்தமையே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் போது கடந்த வருடத்திற்க ஒப்பாக வருடாந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் ரூபா 1,182,476 இனால் அதாவது, 227 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. எனினும், வரிக்கு பின்னரான இலாபத்திற்கு பதிலாக வரிக்கு முன்னரான இலாபத்தினை அடிப்படையாக கொண்டிருந்த காரணத்தால் ரூபா 266,750 இனால் ஊக்குவிப்புக் கொடுப்பனவு மிகைக் கணிப்பீட்டுக்கு உள்ளாகியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு
### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) திட்ட உதவியாளர் (Planning Assistant) உத்தியோகத்தரகள் நால்வருக்கு செலுத்த வேண்டிய சம்பளமாக ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலத்திற்கு ரூபாய்.636,000 | அந்த உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபட்டமைக்கான தகவல்கள் கொடுப்பனவுகளுக்காக இதுவரையிலும் சமர்ப்பிக்கப்படாமையால் | மனித வளத்தினை சரியாக முகாமை செய்வதற்கு கம்பனி நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | கணக்குகளில் அட்டுறு கொடுப்பனவின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் இவ் உத்தியோகத்தர்கள் கம்பனியில் சேவையாற்றிய / சேவையில் ஈடுபட்டுள்ளமைக்கான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | அந்த கொடுப்பனவுகள் இடம்பெறவில்லை. எவ்வாறான போதிலும் இது தொடர்பில் பணிப்பாளர் சபைக்கு தெரிவித்து எதிர்வரும் வருடங்களில் உரிய சீராக்கங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | இலங்கை துறைமுகங்கள் அதிகார சபைக்கு சொந்தமான பாலியகொடையில் அமைந்துள்ள கட்டிடம் ஒன்று உடன்படிக்கை கைச்சாத்திடப்படாது கம்பனியினால் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த போதிலும் அதற்கான வாடகை செலுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் அக்கட்டிடமானது மீண்டும் தனியார் தரப்பினர் ஒருவருக்கு ரூபாய்.25,000 ஆன மாதாந்த வாடகைக்கு குத்தகைக்கு வழங்கி வருமானம் ஈட்டப்படுகின்றமை கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்டது. | உரிய தரப்பினருடன் உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய தரப்பினருடன் உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு கம்பனி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது. |

## 3.2 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | துறைமுகங்கள் முகாமைதுவம் மற்றும் மதியுரை சேவைகள் (தனியார்) கம்பனி தனியார் நிறுவனம் ஒன்றுடன் கைச்சாத்திட்டு இருந்த குத்தகை உடன்படிக்கை 2022 மே 31 ஆம் திகதி நிறைவடைந்திருந்தது. உடன்படிக்கை நீடிப்பு செய்யப்படாது 5 மாதங்களுக்கான வருமானமாக | அந்த தனியார் நிறுவனத்திற்கு வளாகத்தில் இருந்து அகன்று செல்வதற்கு 2022 அக்டோபர் மாதம் வரையிலும் காலம் வழங்கப்பட்டிருந்ததுடன் அக்காலப் பகுதியினுள் வருமானம் சேகரிக்கப்பட்டுள்ளது. எவ்வாறான போதிலும் அவர்களை அகற்றுவதற்கு நீதிமன்றத்தில் வழக்கொன்று | உரிய நிறுவனங்களுடன் முறையான உடன்படிக்கை கைச்சாத்திட்டு வருமானம் சேகரிப்பதற்கு கம்பனி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது. |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டில் ரூபாய்.3.288,765 கிடைத்திருந்த போதிலும் உடன்படிக்கையை புதுப்பித்து குத்தகை வாடகை அறவிடுவதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | விசாரிக்கப்படுவதுடன் இதுவரையிலும் நிறுவனத்திற்கு நலன் ஏற்படும் வகையில் தீர்ப்பொன்று கிடைத்துள்ளமையால் சட்ட ஆலோசனைகளின் அடிப்படையில் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளது. அவர்கள் அகற்றப்பட்ட பின்னர் குறித்த வளாகத்தினை பொருத்தமான குத்தகையாளர் ஒருவருக்கு குத்தகை உடன்படிக்கை ஊடாக வழங்குவதற்கு முகாமைத்துவம் திட்டமிட்டுள்ளது. | |
| (ஆ) | இலங்கை துறைமுகங்கள் முகாமைத்துவ மற்றும் மதியுரை சேவைகள் (தனியார்) கம்பனி நடாத்திச் செல்லப்படும் அலுவலக கட்டிடத்தின் மாதாந்த வாடகையை செலுத்துவதற்கு உரியதாக இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையுடன் முறையான உடன்படிக்கை கைச்சாத்திடப்படவில்லை என்பது கணக்காய்வில் உறுதிப்படுத்தப்பட்டதுடன் 2021 அக்டோபர் 25 ஆம் திகதி SLPMCS11/2021 இலக்க கம்பனியின் பணிப்பாளர் சபை தீர்மானத்திற்கமைய வளாகத்திற்கான நிலுவை வாடகை ரூபாய்.9,402,527 எனுமாறு கணிப்பிடப்பட்டிருந்த போதிலும் குத்தகை வாடகை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கம்பனியின் நிலைப்பாடானது இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் துணை கம்பனி ஒன்றான இந்த கம்பனியின் மூலம் துறைமுகத்திற்கு அத்தியாவசியமான உபகரண சேவை வழங்கல் இடம்பெறுகின்றமையால் கம்பனிக்கு கிடைக்கும் வருமானத்திற்கு ஒப்பாக மிகவும் குறைவாக காணப்படுகிறது. இது தொடர்பில் கௌரவ அமைச்சரின் மற்றும் அமைச்சின் செயலாளரின் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடல்களில் துறைமுகங்கள் அதிகார சபையினால் ரூபாய்.50,000 ஆன மாதாந்த குத்தகை தொகைக்கு குறித்த வளாகத்தினை கம்பனிக்கு வழங்குவதற்கு இணங்கியுள்ளதுடன் அதற்கமைய உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு இணக்கப்பாடு காணப்பட்டுள்ளது. இதுவரையிலும் வரைவு உடன்படிக்கைகள் கம்பனிக்கு கிடைத்துள்ளன. அந்த இணக்கப்பாடு ஆனது இந்த வருடத்திலேயே இடம் பெற்ற போதிலும் | நிலுவை பணம் செலுத்தப்படாது என்னும் இரு தரப்பினரதும் இணக்கப்பாடு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில் லை. கணக்காய்வு திகதி வரையிலும் முறையான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிர ாததுடன் கம்பனி துரிதமாக உடன்படிக்கை கைச்சாத்திட்டு குத்தகை வாடகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது. |

| | | |
|---|---|---|
| | உடன்படிக்கை கைச்சாத்திடப்படும் வகையில் அதனை நிகழத்தக்க பொறுப்பில் காண்பிப்பதற்கு கம்பனியினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நிலுவை குத்தகை தொகையினை செலுத்துவதற்கு கம்பனி உடன்பட்டிராமையால் கம்பனியால் குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கு உரிய ஒதுக்கம் மேற்கொள்வதற்கு அல்லது கொடுப்பனவு மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆம் திகதிய நிதி அமைச்சின் பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் 01/2021 கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் செயற்பாட்டு கையேடு | | |
| (அ) 3.1(i) அத்தியாயத்திற்கு அமைய, கம்பனியின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு பொது திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இணங்குகின்றேன். எதிர்காலத்தில் பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய சுற்றறிக்கைக்மைய கம்பனியின் பதவி அணியை அங்கீகரித்துக் கொள்ள முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது. |
| (ஆ) 3.2 ஆம் அத்தியாயத்திற்கு அமைய கம்பனியின் பதவியணிக்காக முறையான ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று தயாரித்து அதற்காக வரிசை அமைச்சின் அங்கீகாரம் மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இணங்குகின்றேன். எதிர்காலத்தில் பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | குறித்த சுற்றறிக்கைக்கமைய முறையான ஆட்சசேர்ப்பு நடைமுறையொன்றினை தயாரித்து வரிசை அமைச்சின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது. |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 ஆண்டறிக்கை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16-2 பிரிவுக்கமைய 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் செயற்பாட்டு கையேட்டின் 6.6 ஆம் அத்தியாயத்திற்கமைய நிதியாண்டு நிறைவடைந்து 60 நாட்களினுள் (60) ஆண்டின் இறுதியிலான நிதிக்கூற்றுக்களுடன் வரைவு ஆண்டு அறிக்கையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கையளிக்கப்பட வேண்டிய போதிலும் கணக்காய்வு திகதியான 2023 மே 15 ஆம் திகதி வரையிலும் வரைவு ஆண்டு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இணங்குகின்றேன். 2022 ஆம் ஆண்டுக்காக ஆண்டறிக்கையொன்று தயாரிக்கப்படவில்லை எதிர்காலத்தில் பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய உரிய காலப்பகுதியினுள் நிதிக் கூற்றுக்களுடன் வரைவு ஆண்டு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது. |

**4.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் வழிகாட்டிக் கோவையின் 2.3 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் மற்றும் கம்பனியின் கூட்டு அகவிதிக்கமைய கம்பனியினை நிறுவுவதற்கான 25 நோக்கங்களை உள்ளடக்கி தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் வருடாந்த பாதீட்டுடன் நிறைவு செய்யப்பட்ட மூலோபாயத் திட்டம் உரிய வரிசை அமைச்சின் செயலாளரின் ஊடாக பணிப்பாளர் நாயகம், பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், கம்பனியின் 2022 ஆம் ஆண்டுக்குரிய | இணங்குகின்றேன். நிறுவனத்தின் எதிர்வரும் 05 வருடங்களுக்காக (2024-2028) மூலோபாயத் திட்டம் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தினை தயாரிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கைக் கோவையின் பின்னிணைப்பு 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் வருடாந்த பாதீட்டுடன் நிறைவு செய்யப்பட்ட மூலோபாயத் திட்டம் உரிய வரிசை அமைச்சின் செயலாளரின் ஊடாக |

| | | |
|---|---|---|
| செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிராததுடன், அதன் காரணமாக கம்பனியின் மீளாய்வாண்டின் செயலாற்றினை பரீட்சிக்க முடியாதிருந்தது. | | பணிப்பாளர் நாயகம், பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்க முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது. |

**4.3 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் அத்தியாயம் மமற்றும் 4.4 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் அரசாங்கத்திற்கு சொந்தமான அனைத்து முயற்சிகளும் கணக்காய்வு குழுவின் ஊடாக பணிப்பாளர் சபைக்கு மாத்திரம் அறிக்கையிடும் உள்ளகக் கணக்காய்வொன்று காணப்பட வேண்டிய போதிலும், அதற்கமைய கம்பனி உள்ளகக் கணக்காய்வு திட்டமிட்டிருக்கவில்லை. | இணங்குகின்றேன். எதிர்காலத்தில் பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வினை திட்டமிடுவததற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |